அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 09/2020

எனது இலக்கம் : EST-6/03/LEA/3125

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.04.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள்

# 2020 றமழான் (ராமசான்) காலத்தின் போது விசேட விடுமுறைகளை வழங்குதல்

இம்முறை றமழான் (ராமசான்) காலம் 2020 ஏப்பிறல் 25 ஆந் திகதி ஆரம்பமாகி 2020 மே மாதம் 24 ஆம் திகதி முடிவடைய உள்ளதால், இக் காலப்பகுதியில் முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கு தொழுகையிலும் மற்றும் மதவழிபாடுகளிலும் ஈடுபடக் கூடிய வகையில் ஒழுங்குகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

02. நாளாந்தம் நிகழும் தொழுகைகள் மற்றும் மதவழிபாடுகளின் நேர அட்டவணை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

* மு.ப. 03.30 தொடக்கம் மு.ப. 06.00 வரை
* பி.ப. 03.15 தொடக்கம் பி.ப. 04.15 வரை
* பி.ப. 06.00 தொடக்கம் பி.ப. 07.00 வரை
* பி.ப. 07.30 தொடக்கம் பி.ப. 10.30 வரை

03. இயன்ற சகல சந்தர்ப்பங்களின் போதும் இவ் உத்தியோகத்தர்கள் சமய வழிபாடுகளில் ஈடுபடக் கூடியவாறு வேலை நேரங்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களின் போது மட்டும் விசேட விடுமுறையை அனுமதிக்கவும்.

04. அமைய அல்லது பதிலீட்டு அடிப்படையில் சேவையாற்றும் முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கு மட்டும், றமழான் (ராமசான்) முடிவுறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னதாக விழா முற்பணத்தை வழங்குவதற்கு தயவு செய்து நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்./ எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு